## January 15, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. கிழக்கு ஆப்பிரிக்கநாடான உகாண்டாவில் அதிபர் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு வியாழக்கிழமை (ஜன. 15) நடைபெறுகிறது. கடந்த 1986-ஆம் ஆண்டு முதல் சுமார் 40 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கும் அதிபர் யோவேரி முசேவேனி தற்போது 7-ஆவது முறையாகப் போட்டியிடுவதால் இத்தேர்தல் சர்வதேச அளவில் கூடுதல் கவனத்தை ஈர்த்துள்ளது. 81 வயதான யோவேரி முசேவேனிக்குப் போட்டியாக இளைஞர்களிடையே அதிக செல்வாக்கு கொண்ட 43 வயது 'பாப் இசைக் கலைஞர் பாபி வைன் களம் இறங்கியுள்ளார். இவர்களுடன் சேர்த்து மொத்தம் 8 பேர் அதிபர் பதவிக்காகப் போட்டியிடுகின்றனர்.

(i) இணைய சேவை முடக்கம்:

தேர்தல் தொடங்குவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்பே, நாடு முழுவதும் இணைய சேவையை அரசு முடக்கியுள்ளது. தவறான தகவல்கள் பரவுவதைத் தடுக்கவும். நாட்டின் பாதுகாப்பைக் கருதியும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அரசு விளக்கமளித்துள்ளது.

(ii) சுமார் 4.5 கோடி மக்கள்தொகை கொண்ட உகாண்டாவில், இந்தத் தேர்தலில் 2.16 கோடி மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அதிபர் முசேவேனி தனது நீண்ட கால அனுபவத்தையும் அதிகாரத்தையும் வைத்து ஆட்சியைத் தக்கவைப்பாரா அல்லது பாபி வைன் இளைஞர்களின் 40 ஆண்டுகால ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பாரா என்பது தேர்தல் முடிவின் எதிர்பார்ப்பாக உள்ளது.

2.சீனாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 9.7 சதவீத அளவுக்கு உயர்வு கண்டுள்ளது; அதே வேளையில் சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை கடந்த ஆண்டில் ரூ.10 லட்சம் கோடி (116 பில்லி யன் டாலர்) என்ற அளவை எட்டியுள்ளது.

(i) இருதரப்பு வர்த்தகமும் இதுவரை இல்லாத அளவில் ரூ.14 லட்சம் கோடி (155.62 பில்லியன் டாலர்) அளவுக்கு உயர்ந்துள்ளது. சீன சுங்கத் துறை சார்பில் வெளியிடப்பட்ட இரு நாடுகளிடையேயான வருடாந்திர வர்த்தகப் புள்ளிவிவர அறிக்கை மூலம் இத்தகவல் தெரியவந்துள்ளது. அதில் மேலும் கூறியிருப்பதாவது:

(ii) பல ஆண்டுகளாக முன்னேற்றம் காண இருந்த இந்திய ஏற்றுமதிகள், கடந்த ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் 19.75 பில்லியன் அமெரிக்க டாலராக (ரூ. 1.78 லட்சம் கோடி) அதிகரித்தது. இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 9.7 சதவீத உயர்வாகும். அதாவது, 5.5 பில்லியன் டாலர் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது.

(iii) இந்தியாவுக்கான சீனாவின் ஏற்றுமதி 12.8 சதவீதமாக அதிகரித்து 135.87 பில்லியன் டாலர் (ரூ.12.27 லட்சம் கோடி) அளவுக்கு வளர்ச்சி கண்டது.

(iv) இருதரப்பு வர்த்தகமும் இதுவரை இல்லாத அளவில் ரூ.14 லட்சம் கோடி (155.62 பில்லியன் டாலர்) அளவுக்கு உயர்ந்துள்ளது.

(v) அதேநேரம், இரு நாடுகளிடையேயான வர்த்தகப் பற்றாக்குறை நிலையான பிரச்னையாக நீடித்து வருகிறது. கடந்த ஆண்டில் அந்நாட்டுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை இதுவரை இல்லாத அளவில் ரூ.10 லட்சம் கோடி என்ற அளவை எட்டியது. கடந்த 2023-ஆம் ஆண்டிலிருந்து இரண்டாவது முறையாக ரூ.9 லட்சம் கோடி (100 பில்லியன் டாலர்) என்ற அளவை இரு நாடுகளிடையேயான வர்த்தகப் பற்றாக்குறை கடந்துள்ளது.

(vi) அமெரிக்காவுடன் வர்த்தகப் பதற்றம் தொடர்ந்து வரும் நிலையிலும் சீனாவின் ஒட்டுமொத்த உலகளாவிய வர்த்தகம் தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருகிறது. சீனாவின் ஏற்றுமதி 3.77 ட்ரில்லியன் டாலர் அளவிலும், இறக்குமதி 2.58 ட்ரில்லியன் டாலர் அளவிலும் பதிவாகியுள்ளது. வர்த்தகப் பற்றாக்குறை 1.2 ட்ரில்லியன் டாலர் அளவில் பதிவாகியுள்ளது. இது கடந்த ஆண்டைக்காட்டிலும் 20 சதவீதம் கூடுதலாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(vii) ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதாக குற்றஞ்சாட்டி இந்தியா மற்றும் சீனா மீது அமெரிக்கா கூடுதல் வரி விதிப்பை மேற்கொண்டுள்ள சூழலில், இந்தியா- சீனா இடையேயான இருதரப்பு வர்த்தகம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

3. சோம்நாத் மீது 1026-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முதல் தாக்குதலின் ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைந்தது.

4. பத்தொன்பது வயதுக்கு உள்பட்ட (யு-19) ஆடவருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி, ஜிம்பாப்வேயின் புலவயோ நகரில் வியாழக்கிழமை (ஜன. 15) தொடங்குகிறது.

போட்டியில் இதுவரை அதிகபட்சமாக இந்தியா 5 முறை சாம்பியனாகியுள்ளது. ஆஸ்திரேலியா நடப்பு சாம்பியனாக களம் காண்கிறது.

5. தில்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் வியாழக்கிழமை (ஜன.15) நடைபெற உள்ள காமன்வெல்த் நாடுகளின் நாடாளுமன்ற தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் பங்கேற்கும் மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைக்க உள்ளார்.

(i) மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா தலைமையில் நடைபெறும் இந்த 42-ஆவது காமன்வெல்த் மாநாட்டில் 42 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் என 61 பேர் பங்கேற்க உள்ளனர்.

(ii) வலுவான ஜனநாயக நிறுவனங்களை நியாயமான முறையில் நிர்வகிப்பதில் அவைத் தலைவர்களுக்கு உள்ள முக்கிய பங்கு, நாடாளுமன்ற செயல்பாடுகளில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயன்பாடு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது சமூக ஊடகங்களின் தாக்கம், நாடாளுமன்றம் குறித்த பொதுமக்களின் புரிதலை மேம்படுத்துவதற்கான புதுமையான உத்திகள், வாக்களிப்பைத் தாண்டி மக்களின் பங்கேற்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

6. தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) தலைவராக ராகேஷ் அகர்வால் நியமிக்கப்பட்டார்.

(i) அவரை என்ஐஏ தலைவராக நியமிக்க மத்திய அமைச்சரவையின் நியமனங்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது. அவர் பணி ஓய்வுபெறும் நாளான 2028-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 வரை, அந்தப் பதவியில் நீடிப்பார் என்று மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சக உத்தரவில் தெரிவிக்கப்பட்டது.

7. இலங்கையில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் 'ஆபரேஷன் பவன்' நடவடிக்கையின் போது இந்திய ராணுவ வீரர்கள் செய்த தியாகம் மதிக்கப்பட வேண்டும்' என்றார் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்.

(i) பிரதமர் மோடி கடந்த ஆண்டு ஏப்ரலில் இலங்கைக்குச் சென்றபோதும் ஐபிகேஎஃப் நினைவிடத்தில் இந்திய வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

(ii) இலங்கையில் தமிழர் பகுதியில் ஏற்பட்ட வன்முறையையடுத்து, இந்தியாவும், இலங்கையும் 1987, ஜூலை 29-ஆம் தேதி ஓர் அமைதி ஒப்பந்தம் செய்துகொண்டன. அதைத் தொடர்ந்து, இந்திய அமைதிகாப்புப் படை இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

(iii) 1987 ஜூலை முதல் 1990 மார்ச் வரை இந்திய அமைதி காப்புப் படை இலங்கையில் நிலைகொண்டிருந்தது. அப்போது விடுதலைப் புலிகளுடனான சண்டையில் 1,200 வீரர்களை இந்தியா இழந்தது.

8. பிஹு பண்டிகை - அஸ்ஸாம்

9. இந்தியாவுக்கான புதிய அமெரிக்க தூதராக தில்லியில் முறைப்படி பதவியேற்ற

செர் ஜியோ கோரின் நியமனக் கடிதத்தை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஏற்றுக் கொண்டார்.

(i) தில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்வில், செர்ஜியோ கோர் சமர்ப்பித்த நியமனக் கடிதத்தை குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொண்டதாக குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

10. ஆய்வுக் கூட்டத்தில், ரூ.3,291 கோடியில் செயல்பாட்டில் உள்ள 27 முத்திரைத் திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்.

(i) மேலும், 2030-ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக்போட்டிகளில் தமிழ்நாடு விளையாட்டு வீரர்கள் பதக்கம் வெல்லும் வகையில் நடவடிக்கை எடுக்கவும், கடம்பூரில் பல்லுயிர் பாதுகாப்பு பூங்கா, மரக்காணத்தில் சர்வதேச பறவை மையம், கடலூர் மாவட்டம், பிச்சாவரத்தில் சதுப்புநில பாதுகாப்பு மையம், தஞ்சாவூரில் சர்வதேச கடல் பசு பாதுகாப்பு மையம், சென்னையில் கடல் ஆமை பாதுகாப்பு மையம் அமைக்கும் பணிகளுக்கு அடுத்த மாதம் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கப்படவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை வழங்கியதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.